EVERWIN MATRIC. HR. SEC. SCHOOL

23.07.19 FAI 1- TAMIL - I STD: VIII

Time :2hours Marks:75

I. கோடிட்ட இடத்தை நிரப்புக. (6x1=6)

1.கடைச்சங்க காலத்தில் எழுதப்பட்ட தமிழ் எழுத்துக்கள் ________ என அழைக்கப்பட்டன.

2.எழுத்துக்களின் புள்ளிகளால் ஏற்படும் குழப்பத்தைக் களைந்தவர் ________

3. தமிழ் எழுத்துக்களின் பழைய வடிவம் ________

4.பறவைகள் ________ பறந்து செல்கின்றன.

5.ஓடையின் ஆசிரியர் ________

6.வாணிதாசன் ________ என்று அழைக்கப்படுகின்றார்

II. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (6x1=6)

7.மக்கள் வாழும் நிலப்பகுதியைக் குறிக்கும் சொல்

அ)வைப்பு ஆ)கடல் இ)பரவை ஈ)ஆழி

8. வானம் +அறிந்த என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ________

அ)வானம் அறிந்து ஆ)வான் அறிந்த இ)வானமறிந்த ஈ)வான்மறிந்த

9.இயற்கையைக் போற்றுதல் தமிழர் ________

அ)மரபு ஆ)பொழுது இ)வரவு ஈ)தகவு

10.பள்ளிக்குச் சென்று கல்வி ________ சிறப்பு

அ)பயிலுதல் ஆ)பார்த்தல் இ)கேட்டல் ஈ)பாடுதல்

11.நன் செய் - என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________

அ)நன் + செய் ஆ)நன்று + செய் இ)நன்மை + செய் ஈ)நல் + செய்

12.தமிழகத்தின் வேர்ட்ஸ் வொர்த் ________

அ)சுரதா ஆ)சிற்பி இ)வாணிதாசன் ஈ)அப்துல் ரகுமான்

III.சரியானவற்றைப் பொருத்துக. (6x1=6)

| | |
|---|---|
| 13.வண்மொழி | -காலம் முழுமையும் |
| 14.மயக்கம் | -தொல்காப்பியர் |
| 15.ஓடை | -வனமிக்கமொழி |
| 16. தமிழ்மொழி மரபு | -வாணிதாசன் |
| 17.நிரந்தரம் | -அரச்சலூர் கல்வெட்டு |
| 18. தமிழ் வட்டெழுத்து | -கலவை |

IV.விடைக்கேற்ற வினாவை எழுதுக. (2x1=2)

19.பாரதியார் எழுதிய உரைநடை நூல் தராசு.

20.பாவலர்மணி என்று அழைக்கப்படுபவர் வாணிதாசன்

V.கீழ்க்காணும் குறுவினாவிற்கு விடையளி (6x2=12)

21. தமிழ் எங்குப் புகழ் கொண்டு வாழ்கிறது?

22.உலகம் எவற்றால் ஆனது?

23.செய்யுளில் மரபுகளை ஏன் மாற்றக்கூடாது?

24.வாணிதாசனின் சிறப்புப்பெயர்களை எழுதுக?

25.ஓவிய எழுத்து என்றால் என்ன?

26.வீரமாமுனிவர் மேற்கொண்ட எழுத்துச் சீர்திருத்தங்களில் எவையேனும் இரண்டினை எழுதுக?

27.தமிழ் எவற்றை அறிந்து வளர்கிறது?

28.ஒலி எழுத்து நிலை என்றால் என்ன?

VI.சிறுவினா எவையேனுத் இரண்டிற்கு மட்டும் விடையளி. (2x5=10)

29.எழுத்துச் சீர்திருத்தத்தின் தேவை குறித்து எழுதுக.

30.ஓடையின் பயன்களாக வாணிதாசன் கூறுவன யாவை?

31.தமிழ் எழுத்துகளின் வரிவடிவ வளர்ச்சி குறித்து எழுதுக?

32. தமிழ் எழுத்துக்களில் ஏற்ப்பட்ட உருவ மாற்றங்களை எழுதுக?

VII.கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க. (5x1=5)

"நாடும் மொழியும் நமதிரு கண்கள்
நாம்தினம் போற்றி வணங்கிடுவோம்
கூடும் அன்பினில் வேற்றுமை மறந்தே
குலவிடுவோமே இந்தியர் என்றே
தேடிய சுதந்தரப் பயிரின் வேலி
தூயநல் ஒருமைப் பாடே ஆகும்
ஓடிடும் வேற்றுமை நோயே உரிய
ஒருமைப் பாடெனும் மாமருந்தாலே".

வினாக்கள் :

1.நமது இரு கண்களாகக் கருதப்படுவன யாவை?

2.தினம் என்பதற்கு இணையான தமிழ்ச்சொல்லை எழுதுக?

3.வேற்றுமை என்பதன் எதிர்ச்சொல்லை எழுதுக?

4.இப்பாடலில் இடம்பெற்றுள்ள உரிச்சொல்லை எழுதுக?

5.சுதந்தரம் – சுதந்திரம் இங்விரண்டனுள் எது சரி?

VIII. கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி. (5x1=5)

தமிழ்நாட்டின் தேசியப்பறவை மரகதப்புறாவாகும். இப்பறவை அடர்ந்த காடுகளில் வாழும். மரகதப்புறா பறப்பதைவிட நடப்பதனை மிகவும் விரும்பும். இப்பறவை பழங்கள், விதைகள், பல்வேறு வகையான தாவரங்களை விரும்பி உண்ணும். இப்பறவை மரங்களில் கூடுகட்டி, முட்டையிடுகிறது. மரகதப்பறவை எளிதாகப் பழகக்கூடிய வகையில் உள்ளது.

வினாக்கள் :

1. தமிழ்நாட்டின் தேசியப்பறவை எது?

2. மரகதப்புறா எங்கு வாழ்கிறது?

3. மரகதப்புறா எதை விரும்பி உண்ணும்?

4. எளிதாகப் பழகக் கூடிய பறவை எது?

5.இப்பறவை எங்கு கூடுகட்டுகிறது?

IX. மொழித்திறன்

ஒருசொல் இருபொருள் தருமாறு எழுதுக. (5x1=5)

1. அணி ______ ______

2. படி ______ ______

3. திங்கள் ______ ______

4. ஆறு ______ ______

5.ஆழி ______ ______

X. 'வாழ்க நிரந்தரம்" ___ எனத்தொடங்கும் தமிழ்மொழி வாழ்த்துப்பாடலை முதல் எட்டு அடிகள் அடிபிறழாமல் எழுதுக. (1x8=8)

XI.நெடுவினா - எவையேனும் ஒன்றிற்கு மட்டும் விடையளி. (1x10=10)

1.எழுத்துக்களின் தோற்றம் குறித்து எழுதுக?

2.தமிழ்மொழியை வாழ்த்திப் பாரதியார் கூறும் கருத்துக்களை தொகுத்து எழுதுக?